உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.446/2021

| | |
|---|---|
| பெயர் | :சிவபாலன்(அ.சா.9) |
| தகப்பனார் பெயர் | :அர்ஜினன் |
| கணவர் பெயர் | : |
| வயது | :41 |
| கிராமம் | :ஒத்தக்கடை |
| வட்டம் | :மதுரை கிழக்கு |
| தொழில் | :காவல் ஆய்வாளர், ஒத்தக்கடை காவல்நிலையம் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

22.09.2025

முதல் விசாரணை:

நான் தற்போது ஒத்தக்கடை காவல்நிலையத்தில் காவல்ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 13.07.2017 அன்று மேலூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, 21.00 மணிக்கு மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மலைச்சாமி(அ.சா.1) வயது 53/2017, என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, காவல்நிலையம் வந்து 23.00 மணிக்கு நிலை ய குற்ற எண்.740/2017, 147, 148, 294(B), 323, 324, 307 இ.த.ச வாக எதிரிகள் திருவாசகம், நம்பி, மாணிக்கவாசகம், ராஜதிலக், ராமன்பாபு ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தை இணைத்து JM, Melur அவர்களுக்கும், மற்ற நகல்களை மேலதிகாரிகளுக்கும் அனுப்பி

வைத்தேன். பின்பு காவல்ஆய்வாளருக்கு புலன் விசாரணைக்கு உதவியாக இருந்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் இருந்து தான் எனக்கு தகவல் கிடைத்ததா என்றால் ஆமாம். வேறு எந்த மருத்துவமனையில் இருந்து எங்களுக்கு தகவல் வரவில்லையா என்றால் வரவில்லை. என்னுடைய காவல்நிலைய வாக்குமூலத்தில் மேலூர் அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்ததாக கூறிவிட்டு தற்போது மதுரை, அரசு இராசாசி மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்ததாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணையில் அ.சா.1 ஆன மலைச்சாமியிடம் இருந்து எத்தனை மணிக்கு புகார் வாக்குமூலம் பெற்றேன் என்ற விபரம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தவுடன் எந்த தேதியில் நீதித்துறை நடுவர், மேலூர் அவர்களுக்கு அனுப்பியுள்ளேன் என்று என்னுடைய காவல்நிலைய வாக்குமூலத்திலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் காவல்நிலைய வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை. முதல் விசாரணையிலும் சொல்லவில்லை. நான் சொன்ன நேரம், சொன்ன தேதியில் மலைச்சாமியிடம் சென்று மதுரை, அரசு ராசாசி மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் தயார் செய்யவில்லை என்றும், நான் காவல்நிலையத்தில் தயாரித்து, பின்னிட்டு வழக்கை அனுசரித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.09.22 19:51:51 +0530

Assistant Sessions Judge

Melur